Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 8-ம் நாள் ரம்ஸான் 5 (21-1-64) செவ்வாய்க்கிழமை இதழ் 244

# தங்கனிக்காவில் இராணுவக் கலகம்

## அதிபர் நியார்ரே எங்கே?

## பிரி. தூதர் கைதாகி விடுதலை

### விமான நிலையம், தபாற் கந்தோர் கலகக்காரர் வசமாயின

லண்டன், ஜன. 20

சென்ற வாரம் திடீர் புரட்சி நடைபெற்ற ஸான்ஸிபாருக்கு அருகேயுள்ள மற்றொரு ஆபிரிக்க நாடான தங்கனிக்காவில் இராணுவத்தின் சில பிரிவுகள் கலகம் செய்துள்ளதாகவும் அதிபர் நியார்ரேயின் இல்லத்தை இராணுவத்தினர் சுற்றிவளைத்துக்கொண்டிருப்பதுடன் உள்நாட்டு மந்திரியை அவர்கள் கைது செய்துள்ளதாகவும் தலைநகரான தாருல் இஸ்லாமிலிருந்து கிடைத்த தெய்திகள் தெரிவிக்கின்றன.

### பிரிட்டிஷ் தூதர் கைதாகி விடுதலை

தங்கனிக்கா அதிபர் நியார்ரே என்னவானார்? எங்கே இருக்கிறார் என்ற விபரம் தெரியவில்லை. தாருல்-இஸ்லாமிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரையும் கலகச் சிப்பாய்கள் கைதுசெய்தபின்னர் விடுதலை செய்ததாகத் தெரிய வருகிறது.

### விமானநிலையத்தைக் கைப்பற்றினர்

தங்கனிக்கா விமான நிலையம், தபால் காரியாலயம், சர்வதேச டெலிபோன் இணைப்புக் காரியாலயம் ஆகியவைகள் கலகக்காரர் வசமாகிவிட்டதாகவும் தாருல்இஸ்லாமிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளும் பிரிட்டிஷ் பிரஜைகளும் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தங்கனிக்காவின் தலைநகரான தாருல் இஸ்லாமில் ஆறுமைல் தூரத்தில் நிறுத்தி வைக்கப்படடிருந்த துப்பாக்கிப்படை அணிதான் கலகத்தை ஆரம்பித்ததென்றும் உடனடியாக தங்கனிக்கா இராணுவத்தின் பெரும்பான்மையான அணிகள் இக்கலகத்தில் பங்கு கொண்டனவென்றும் செய்திகள் கூறுகின்றன.

தாருல்-இஸ்லாம் தெருக்களில் சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

சென்றவாரம் புரட்சியினால் ஆட்சியைக் கைப்பற்றியஸான்சிபாரின் புரட்சிச் சபையினர் தமது நாட்டில் அமைதியை ஏற்படுத்திவிட்டதையும் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டுவிட்டதைத் தெரியப்படுத்தவும் தங்கனிக்காவிலிருந்து உதவிக்காக 300 துருப்புக்களைக் கேட்டிருந்தனர். இவர்களில் நூறுபேர் நேற்று ஸான்சிபாருககு வந்து தலைநகரில் அணிவகுத்துச் சென்றனர். இவர்களுடைய அணிவகுப்பு மரியாதையை புரட்சித் தலைவர் காருமே ஏற்றார்.

---

மலேசியத் தகராறு

## கென்னடி முயற்சிக்கு மக்கபகல் ஒத்துழைப்பு

மணிலா, ஜன 20

மலேசியா அமைப்பினால் இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்குமுள்ள தகராறுக்குச் சுமுகமான தீர்வுகாண அமெரிக்க அதிபர் திரு. ஜோன்சனின் விசேஷ பிரதிநிதியாக தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்து முயற்சிசெய்யும் அமெரிக்க அட்டர்ணிஜெனரல் திரு. கென்னடிக்கு பூரண ஒத்துழைப்புத் தருவதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மக்கபகல் தெரிவித்துள்ளார்.

திரு. ரொபர்ட் கென்னடியும் மக்கபகலும் இன்று சந்தித்துப் பேசினர். பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

மலேசியா, இந்தோனேஷிய, பிலிப்பைன்ஸ் அதிபர்களின் உச்சிமகாநாடு நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதை கூட்டறிக்கை சூசகமாகத் தெரிவிக்கிறது.

மலேசியத் தகராறுக்குச் சுமுகமான தீர்வுகாண்பதற்கு திரு. கென்னடி எடுக்கும் முயற்சிகளுக்குத் தாம் பூரண ஒத்துழைப்புத் தருவதாக திரு மக்கப்பகல் தெரிவித்தார்.

### கம்போடிய தலைவர் விருப்பம்

மலேசியத் தகராறைச் சமரசமாகத் தீர்த்துவைக்கத் தாம் மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாக கம்போடிய ராஜ்யத் தலைவர் இளவரசர் நொரடம் சிகானுக தெரிவித்துள்ளார்.

---

### உபதபாற்கந்தோர் நியமனம் தாமத

கொடிகாமம், திங்கள்

மிருசுவில் உப தபாற்கந்தோர் அதிபரை நியமிக்கும் பொருட்டு 62-ம் ஆண்டு மார்கழிமாதம் நேர்முகப்பரீட்சை வைக்கப்பட்டது. ஆனால் ஒரு வருடத்துக்கு மேலாகியும் இதுவரை உபதபாற்கந்தோர் நியமிக்கப்படவில்லை. கடந்த இரண்டுவருட காலமாக தற்காலிகமாக ஒருவரே கடமையாற்றி வருகிறார்.

அரசியல் தலையீட்டின் காரணமாகவே இதுவரை நியமனம் நடைபெறவில்லையென்றும், முன்னால் தபால்மந்திரி திரு. பி. பி ஜி. கலுகல்லையிடம் இதுசம்பந்தமாக பல தடவை அறிவிக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது.

### சாவகச்சேரி தபாற்கந்தோர்

யாழ்ப்பாணம் திங்கள்

சாவகச்சேரியில் சுமார் 42,000 ரூபா செலவில் கட்டி முடிக்கபபட்ட புதிய தபாற்கந்தோர் திறப்புவிழா அடுத்த மாதம் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

சகலவசதிகளுடனும் கட்டப்பட்ட இந்த புதிய தபாற்கந்தோரின் கீழ் தென்மராட்சியிலுள்ள 11 உப-தபாற்கந்தோர் இருக்கின்றது.

---

## தபால் பைகளை ஏற்கமறுத்த பஸ் கண்டக்டர்

### தமிழில் விலாசமெழுதியதும் ஏற்றுக்கொண்டார்

கொடிகாமம், திங்கள்

சிங்கள லேபல்கள் எழுதப்பட்ட எட்டு தபால் பைகளை கொடிகாமம் உப-தபாற்கந்தோர் ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள பருத்தித்துறை பஸ்கண்டக்டர் மறுத்ததோடு சிங்கள லேபல்களையுடைய தபால் பைகளை ஏற்க மறுப்பதாக எழுத்துமூலம் தரக்கூட தனக்கசம்மதமென தெரிவித்தார். இதனால் பருத்தித்துறைக்கும் மற்றும் இடங்களுக்குச் செல்லவேண்டிய பிரயாணிகளுக்கு தாமதமேற்பட்டது.

வழக்கமாக வரணி, நெல்லியடி, கரவெட்டி, பருத்தித்துறை தபாற்கந்தோர்களுக்கு சேரவேண்டிய தபால் பைகளை கொடிகாமத்திலிருந்து பஸ் மூலமே அனுப்பிவந்தார்கள். கொடிகாமத் உப-தபாற்கந்தோர் தபால் ஊழியர்களிடமிருந்து பருத்தித்துறை பஸ் கண்டக்டர் தபால் பைகளை பாரமேற்று சேரவேண்டிய கந்தோர்களில் சேர்ப்பிப்பார்.

உத்தியோக மொழிச்சட்டம் அமுலான தினமாகிய ஜனவரி 1-ம் திகதிக்குப்பின் தபால் பைகளிலுள்ள லேபல்கள் தனிச்சிங்களத்தில் மட்டுமே எழுதப்பட்டுவருகிறது. இதனால் சிங்களம் தெரியாத பஸ் கண்டக்டர் ஏற்கனவே இரு தடவை சிங்கள லேபலுள்ள தபால் பைகளை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து லேபல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது.

இன்று காலை பருத்தித்துறை பஸகண்டக்டர் தனக்கு சிங்களம் தெரியாதென்றும் அந்த லேபல்களிலுள்ள பெயர்களை படித்து அறிந்துகொள்ள முடியாதென்றும் கூறி தபால் பைகளை ஏற்க மறுத்துவிட்டார்.

சிங்கள லேபல் காரணமாக தபால் ஊழியர்களுக்கும் பஸ கண்டக்டருக்கும் ஏற்பட்ட தகராற்றைத் தீர்த்துவைக்கும் பொருட்டு கொடிகாமம் உப-தபாற்கந்தோர் அதிபர் தபால் ஊழியர்களின் உதவியுடன் அந்த லேபல்களில் உள்ள சிங்கள பெயர்களை தமிழில் மொழிபெயர்த்து எழுதிய பின் பஸ் கண்டக்டர் அப்பைகளை ஏற்றுக்கொண்டார்.

---

## கணக்காளர் பரீட்சைக்கு சிங்களம் ஒருபாடம்

### அரசாங்க குமாஸ்தாக்கள் சேவை சங்கம் ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

கணக்காளர் சேவையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இருக்கும் பாடத்திட்டத்தில் சிங்களத்தையும் ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டுள்ளதற்கு அரசாங்க குமாஸ்தாக்கள் சேவை சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இவ்வித செயல் மந்திரிசபையின் முடிவிற்கு முரணானது என்றும் அரசகரும மொழியில் தேர்ச்சி பெருகவர்களை அனுகூலமற்ற நிலையில் நிறுத்திவிடும் எனவும் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது

அரசகரும மொழி பற்றிய மந்திரிசபை உபகமிட்டிக்குச் சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

உத்தியோகத்தர்கள் தெரிவு சம்பந்தமாகவும் வேலை உயர்வு சம்பந்தமாகவும் மற்றப் பரீட்சைகள் எந்த முறையில் நடத்தப்படுகின்றனவோ அதே முறையில்கணக்காளர் சேவைக்கான பரீட்சையையும் நடத்துமாறு மந்திரி சபைக்கு சிபார்சு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்களத்தைக் கணக்காளர் பரீட்சைக்கு ஒரு பாடமாக்குவதை நீக்கிவிடுமாறு நாம் அரசாங்கத்தைக் கோரும் சமயத்தில் அரசாங்கம் புது விதியைப் புகுத்துவதாகவும் அதாவது இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் ஒருவர் சிங்களத்தில் ஜே. எஸ். ஸி. வரை தேர்வுபெற்றிருக்க வேண்டும் என்று அரசாங்கம் விதித்துள்ளதாகவும் அரசாங்க சேவை குமாஸ்தாக்கள் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மணி வாக்கு

ஜாதி, மதம், கலாசாரம் ஆகியவற்றின் பேரால் மக்களைத் தூண்டுவதென்பது சுலபமான காரியம்; ஆனல் அது மக்களை ஏமாற்றுவதாகும். —நேரு

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு
தை மீ 8 உ (21-1-64)

## பட்டினசபைக் காரியதரிசி விவகாரம்

காங்கேசன்துறைப் பட்டினசபைக் காரியதரிசி விவகாரம் உச்சநிலையை அடைந்திருப்பது ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனுக்கோ, நாட்டு மக்களுக்கோ நல்லதல்ல. வீண் பிடிவாதமும், வரட்டுக் கௌரவமும் யாருக்கும் நன்மைதராது. உண்மை நிலையை உணர்ந்து அதற்கேற்றபடி தனிப்பட்டவர்களும் சரி, ஸ்தாபனங்களும் சரி நடந்துகொள்ளவேண்டும்.

காங்கேசன்துறைப் பட்டினசபை தனது அன்றாட அலுவல்கள் யாவற்றையும் தமிழில் செய்வதென்று தீர்மானித்து, அதன்படி நடந்துவருகிறது. தமிழில் அலுவல்களைச் செய்வதென்று தீர்மானிக்கவும், அதை அமுல்செய்யவும் அதற்கு உரிமையுண்டு. ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதும், உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதும் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் கடமை; பொறுப்பு.

முழுக்க முழுக்கத் தமிழில் தனது அலுவல்களைச் செய்துவரும் காங்கேசன்துறைப் பட்டின சபையின் காரியதரிசியாக, தமிழ் தெரியாத ஒருவரை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் இவ்வருடம் முதல் திகதியிலிருந்து நியமித்தது. இதன்விளைவாகப் பட்டின சபை அந்த உத்தியோகத்தருக்குக் கதவடைப்புச் செய்தது. இது சம்பந்தமாகப் பட்டினசபைத் தலைவருக்கும், ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் தலைவருக்குமிடையில் கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்று, முடிவில் தலைவர் தலைமையில் தூதுக்குழு ஒன்றும் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனைச் சந்தித்துப் பேசியுள்ளது. இப்பேச்சுவார்த்தைகளினல் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மாருக "ஒரு வாரமாவது அந்த அதிகாரியை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கமிஷன் தனது பிடிவாதத்தை வற்புறுத்தியது. "ஒரு நாளைக்குக்கூட அவர் தேவையில்லை" என்று பட்டினசபைத் தூதுக்குழு அறிவித்துள்ளது.

காரியதரிசி ஒரு சிங்களவராக இருப்பதால் தான் அவரை ஏற்றுக்கொள்ள பட்டினசபை மறுப்பதாக யாரும் கருதக்கூடிய முறையில் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் நடந்துகொள்வது வருந்தத்தக்கது. தமிழில் தனது அலுவல்களைச் செய்யும் பட்டின சபையில், அதன் நிர்வாக அலுவல்களைக் கவனிக்கவேண்டிய பொறுப்பான பதவியில் இருக்கக்கூடியவர் அந்த மொழி தெரியாதவராக இருப்பதில் சபைக்கோ, அப்பகுதி மக்களுக்கோ எவ்விதமான பயனும் இருக்கமாட்டாது என்பதாலேயே இந்த நியமனத்தை காங்கேசன்துறைப் பட்டினசபை ஏற்க மறுக்கிறது.

இந்த உண்மையை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் உணராமலிருக்க முடியாது. தெரிந்தும் தெரியாத மாதிரி வீண் பிடிவாதம் காட்டுவது யாருக்கும் நன்மையைத் தராதாகையால் இந்த நியமனத்தை ரத்துச் செய்து, தமிழ் தெரிந்த, தமிழில் அலுவல்களைக் கவனிக்கக்கூடிய ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்து, பிரச்னை பெரிதாகி நெருக்கடி ஏற்படாமல் தடுக்க வேண்டியது ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் கடமை. இதை இனியும் வளரவிட்டு வேடிக்கை பார்ப்பது விபரீதத்தில் கொண்டுபோய்விடக்கூடுமாகையால் ஸ்தலஸ்தாபன மந்திரியும் இதில் தலையிட்டு நிலைமையைச் சமாளிக்க வேண்டியது அவசியமாகும்.

காங்கேசன்துறைப் பட்டின சபையைப்போலவே மட்டக்களப்பு நகரசபைக் காரியதரிசியாகவும் தமிழ் தெரியாத ஒருவரை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் நியமித்துள்ளது. இம்மாதம் முதல் திகதி தொடக்கம் தமிழில் தனது சகல அலுவல்களையும் செய்வதென்று தீர்மானித்துள்ள மட்டக்களப்பு நகரசபை, தமிழ் தெரியாத அந்த உத்தியோகத்தர் தேவையில்லையென்று தெரிவித்தும் பயனில்லாமல் போகவே, அவருக்குச் சம்பளம் கொடுப்பதில்லையென்று தீர்மானித்திருக்கிறது. இது எந்த அளவுக்கு நிலைமையைக் கொண்டுபோய்விடுமோ தெரியவில்லை.

உத்தியோக மொழிச் சட்டத்தை ஸ்தலஸ்தாபன சபைகள் மூலம், தமிழ்ப்பகுதி மக்கள்மீது திணிக்கலாமென ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் நினைத்து வேண்டுமென்றே இதுபோன்ற நியமனங்களைச் செய்வதாக பொதுமக்கள் கருதுவதற்கு இடமுண்டு. அரசாங்கம் உத்தேசித்துள்ள மாவட்ட சபைகள் மசோதா வரும்வரையிலாவது ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் தனது வழக்கமான அலுவல்களைச் செய்துகொண்டு இருக்கட்டும். விஷப் பரீட்சைகளில் இறங்கி நாட்டின் அமைதியைக் குலைக்க வேண்டாமென்று கமிஷனைக் கேட்டுக்கொள்கிறோம்.

# 'கோட்டை'யைக் கைப்பற்ற கோஷ்டிகள் தயாராம்

## தமிழ் எம். பி. யின் சிங்கள தந்தி: சுகததாசாவின் தமிழ் மோகம்

— கொழும்பு நிருபர் —

ஆயிரங்கால் மண்டபத்தின் சரித்திரக்கதைக்கொப்பான நிலையில் எல்லாப் பொலிவு மிளந்து நிற்கும் சுதந்திரக் கட்சியைப் புதுமெருக்கிட்டு கட்டி எழுப்பும் பொறுப்பை கிழக்குமாகாண அரசியல் சிற்பி ஒருவர் செய்வதற்கு ஆரம்பித்திருக்கிறார்.

ஒட்டு வேலைகளில் கைதேர்ந்த சிற்பிகளுக்கு இவர் அழைப்பு அனுப்பியிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஐக்கிய முன்னணி சுதந்திரககட்சி ஆகியவைகளுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் பிளவுக்கு சாந்து பூசிவிட்டால் பிரச்னையே தீர்ந்துவிட்ட தென்பதற்கொப்பாகிவிடலாமென்றும் சிற்பிகள் நம்புகின்றனர்.

சுதந்திரக்கட்சிக்கும், ஐக்கிய முன்னணியினருக்குமிடையிலேற்பட்டிருக்கும் வெடிப்பு மண் குடத்தில் ஏற்பட்ட வெடிப்பென்று இடதுசாரி மனப்பான்மையுடையவர்கள் கருதுகிறார்கள். ஆனல் அப்படியில்லையென்றும் வெண்கலக் குடத்தில் தானே வெடிப்பு வந்தது. அதை ஒட்டிவிடலாம் என்றுர்கள் இடையிலுள்ளவர்கள்.

ஒட்டிவிடலாம் என்பதில் நம்பிக்கையுடையவர்கள் தான் இப்போது மும்முரமாக நிற்கிறார்கள். இருவரையும் இணைத்து இன்னுமொரு முன்னணியை உருவாக்கி தேர்தலில் யு. என். பி.யை எதிர்த்து அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதே இவர்களுடைய முக்கிய திட்டமாகும்.

தினேதினே யு. என். பி. நாட்டில் பலம் பெற்று வருகிறதென்று கிடைக்கும் செய்திகளினல்தான் இவ்வித ஜரூர் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறதென அவதானிகள் நம்புகிறார்கள். இன்னும் இரண்டொரு வாரத்தில் சுதந்திரக் கட்சி - ஐக்கியமுன்னணி ஒட்டு வேலைகளின் முதற் கட்டம் பகிரங்கமாகலாமென்றும் அநேகர் கூறுகிறார்கள்.

### முற்றுகைக்கு ஆயத்தமாகலாம்

பாராளுமன்ற ஆட்சியில் நம்பிக்கையில்லையென்று பகிரங்கமாகக் கூறிவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவுபட்ட சண்முகதாசன் கோஷ்டியினர் 'கோட்டை'யை கைப்பற்றி விடக்கூடுமென்று கம்யூனிஸ்ட் வட்டாரங்களில் ஒரு பிரிவினர் இரகசிய இடங்களில் பேசிக்கொள்ளுகிறார்கள் என்று கூறப்படுகிறது. இங்கு 'கோட்டை' என்பது கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தையும் அதையடுத்த பகுதிகளையும் அல்ல. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியாலயத்தைத் தான்! இது கொட்டாரோட்டிலுள்ளது.

'சண்' கோஷ்டியினர் கம்யூனிஸ்ட் கோட்டையை எந்த நேரத்திலும் திடீரென முற்றுகையிட்டுவிடக்கூடுமென்று கருதும் தோழர்கள் அப்படி ஏதும் முற்றுகை ஏற்பட்டால் அதை முறியடிக்க பதில் திட்டத்தையும் தயார் செய்துள்ளார்களென்றும் கூறப்படுகிறது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கோட்டைக்குள் இன்னுமொரு ஸான்ஸிபார் புரட்சியா என்பதை காலக்கிரமத்தில்தான் அறியக்கூடியதாகவிருக்கும்.

கொழும்பிலுள்ள கம்யூனிஸ்ட் கோட்டை டாக்டர் எஸ. ஏ. விக்கிரமசிங்காவுடைய பெயரில் தானிருக்கிறது. தனிப்பட்ட ஒரு நபரின் சொத்தை எடுத்துக்கொள்ள 'புரட்சி'யிலும் பார்க்க கோடு கச்சேரிக்குப் போனல் நல்லதென்ற யோசனையும் சிலருக்கு இருப்பதாக கடைசியாக கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. பார்லிமெண்ட் ஆட்சியிலே நம்பிக்கையில்லாத 'சண்' கோஷ்டியினர் என்ன தான் செய்யப்போகிறார்கள் என்பதை காலந்தான் பதில் சொல்லும்.

### சுகததாசாவின் மும்மொழி வாழ்த்து

தனிச்சிங்களக் கெடுபிடி அட்டகாசம் செய்யும்போது கொழும்புமேயர் திரு சுகததாசவோ தமிழுக்கும் அந்தஸ்து கொடுத்துக் கௌரவித்து வருவதாக முனிஸிபல் வட்டாரம் ஒன்று கூறுகிறது.

இதுவரையும் நடந்துவந்ததைப் போலவே வேலைகள் எல்லாம் அந்தந்தப் பாஷைகளிலேயே நடைபெற்று வர வேண்டுமென்பதும் அவரது விருப்பமாகவுள்ளதாம்.

சமீபத்தில் அவர் அனுப்பிய புதுவருட வாழ்த்துச் செய்தியை மூன்று மொழிகளிலும் அனுப்பி வைத்தார். ஒரே கார்ட்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளும் இருந்தன.

இப்படி மூன்று மொழிகளிலும் பார்க்க சிங்களமும் ஆங்கிலமும் போதுமானதென்று தெரிவித்த அபிப்பிராயங்களையெல்லாம் சுகததாசா குப்பையில் போட்டுவிட்டாரென்றும் கூறுகிறார்கள்.

### தமிழ் எம். பி.யின் சிங்களத்தந்தி

தமிழ் எம். பி. ஒருவர் மந்திரிகளுக்கும், அரசாங்க இலாகா அதிகாரிகளுக்கும் அனுப்பும் தந்திகளையெல்லாம் சிங்களத்தில் அனுப்பி வைப்பதாக அரசாங்க இலாகாக்களைச் சேர்ந்தவர்கள் சிலர் கூறுகிறார்கள்.

சிங்களத் தந்திகளெல்லாம் கொழும்பிலுள்ள தலைமைத் தந்திக் காரியாலயத்திலிருந்து தான் அனுப்பி வைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அரசாங்கத்திடமிருந்து எதையாவது பரிந்து பெற்றுக்கொள்ளத்தான் இந்த எம். பி. இப்படி நடந்துகொள்ளுகிறாரெனவும் குமாஸ்தாக்கள் கூறுகின்றனர்.

# ஐயாறன் எழுதுவது

அன்று கப்பலில் அதிகக் கூட்டம். 600 பேருக்கு மேல் பிரயாணிகளிருந்தனர். வாரத்திலே தனுஷ்கோடி கப்பல் மூன்றே நாள்தான் ஓடுகிறது. முன்போல் தினசரி ஓடுவதாயின் பிரயாணிகளுக்கு மிக வசதியாக இருக்கும். கப்பல் ஓட்டும் இந்திய ரயில்வேக்கு இக்கப்பலால் அதிக நஷ்டமென்றும் அதனல்தான் மூன்றே நாள் விடுவதாகவும் காரணம் சொல்லப்படுகின்றது.

இருதேச நல்லுறவுகளையும் பலப்படுத்த இந்தக் கப்பல் நல்ல பணி செய்கின்றது. இவ்வித முக்கிய விஷயத்தில் சிறிது நஷ்டத்தை இந்திய அரசாங்கம் பொருட்படுத்தக் கூடாது. இந்தியாவுக்கு வந்து பார்க்க வேண்டுமென்ற ஆவல் சிங்கள கிராமமக்களிடையேயும் அதிகரித்து வருகிறது. அன்று கப்பலில் மகாபோதி சங்கத்தின் ஆதரவில் பல சிங்கள ஆண்களும் பெண்களும் பயபக்தியுடன் இந்தியாவுக்கு யாத்திரை செய்தனர். ஒருபக்கம் அரசியல் பிணக்குகளும் முட்டுக்கட்டைகளும் இருந்தாலும் இருதேச பொதுமக்களைப் பொறுத்தவரை, இருசாரினரும் இருதேசங்களுக்கும் சென்று தரிசிக்க வேண்டுமென்று மிகவும் ஆவல் கொண்டிருக்கின்றார்கள்.

உலகத்து யாத்திரீகர்கள் அதிகமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வரவேண்டுமென்று இருநாட்டு அரசாங்கங்களும் மிகவும் ஆவல்காட்டுகின்றன. ஆனல் இந்தியாவுக்கு இலங்கையர் செல்லவும் இலங்கைக்கு இந்தியர் யாத்திரை செல்லவும் முடியாதபடி இரு அரசாங்கங்களும் போட்டா போட்டியுடன் பல பல தடைகளையும் போடுகின்றன. இதனல் இருதேச பொதுமக்களின் அடிப்படைப் பிரயாண உரிமைகளையும் மறுப்பதுடன், இருநாட்டு நல்லுறவும் கெடுவதாக இருக்கிறது. இது இருசாரினருக்கும் நல்லதன்று. பரஸ்பர நன்மையையும் ஜனநாயக உரிமையையும் கருதி, இந்தத் தடைகளைத் தளர்த்திவிட வேண்டும். முதலில் இந்திய அரசாங்கம் வாரத்தில் 6 நாட்கள் கப்பல் ஓட்ட வேண்டும். தலைமன்னருக்கு இப்போது இலங்கை அரசாங்கம் 6 நாட்களும் ரயில் விடுவதால் இந்திய அரசாங்கமும் சிறிது நஷ்டத்தைப் பாராமல் முன்போல் கப்பலை விடுவது பலவிதங்களிலும் அவசியம். அப்படிவிட்டால் கப்பலில் ஜனநெருக்கம் இல்லாததுடன் யாத்திரை சேவையும் பரஸ்பரம் அதிகரிப்பதாக இருக்கும்.

* * *

தலைமன்னருக்கு ரயில் சரியாக காலை 6 மணிக்கு வந்ததென்றாலும் 'கஸ்டம்ஸ்' சோதனைகள் முடிந்து கப்பல் பகல் 1 மணிக்குமேல்தான் புறப்பட்டது. தலைமன்னருக்கு ரயில் வரும்போதே பலருக்கும் வயிற்றில் நெருப்புத்தான். ஒரு பெரிய குடும்பஸ்தர். இலங்கை அரசாங்கத்தில் 35 வருட சேவை செய்துவிட்டு ஒரே அடியாக இந்தியா திரும்புகிறார். மொத்தம் 30 பொதிகளை ஏற்றினர். மனிதருக்கு நிம்மதியே இல்லை. விடுவாரு விடுவாரு என்று கேட்டுக்கொண்டே இருந்தார். அதிக சோதனை செய்யாமல் எல்லாவற்றையும் விட்டுவிட்டதாக கப்பலில் வந்து ஆறுதலாகச் சொன்னர்.

ஒரு மலைநாட்டுப் பெண். அவரது புருஷனை நாடுகடத்திவிட்டனர். அப்பெண் தன் கைக்குழந்தையுடன் பல நகைகளையும் போட்டுக்கொண்டு வந்தார். நகைகளை எப்படி விட்டார்கள் என்று கேட்டதற்கு ஏற்கெனவே பர்மிட் வாங்கியதாகவும் அதனல் விட்டுவிட்டதாயும் சொன்னர். மற்றொரு டி. ஆர். பி. தாய். கையில் இருந்த தங்கவளையல்களைபறித்துவைத்துக்கொண்டு விட்டதாக வருத்தத்துடன் கூறினர். முன்னதாக அவர் பர்மிட் வாங்கவில்லையாம். இப்படி ஒவ்வொருவர் விஷயமும் ஒருகதை.

தனுஷ்கோடியில் பிரயாணிகள் அனைவருக்கும் கஸ்டம்ஸ் சோதனையின்போது உட்கார வசதி செய்துள்ளனர். தலைமன்னரில் கியூ வரிசைகளில் வெகுநேரம் நிற்க வேண்டியுள்ளது. தலைமன்னரில் கஸ்டம்ஸ் அதிகாரிகள் நின்றுகொண்டு சோதனை செய்கையில், தனுஷ்கோடியில் சில இளம் அதிகாரிகள் நீதிபதி போல் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு முதலில் என்னென்ன நம்மிடம் இருக்கிறது என்று கேட்டு பதிவு செய்து கொண்டு பின்னர் பெட்டியைத் திறக்கச் சொல்லுகிறார்கள். எல்லாரையும் சந்தேகக் கண்களுடன் பார்ப்பதுடன் சற்றே வாய்த்துடுக்காக அனாவசியமான வார்த்தைகளை ஒருவர் கொட்டியதைக் கண்டேன். சற்றே அதிக பெருந்தன்மையாகவும் கண்யமாகவும் இந்த அதிகாரிகள் நடப்பது மகத்தான இந்தியாவின் பண்புக்கும் பெயருக்கும் உகந்ததாக இருக்கும். சற்றே சிரித்த முகத்துடன் மரியாதையாக நடப்பதால் இவர்களுக்கு என்ன நஷ்டம்?

* * *

தனுஷ்கோடி சேரும்போது பெரும்பான்மை பிரயாணிகளுக்கும் நல்ல பசி. கையில் ஏதோ முன்யோசனையுடன் கொண்டுவந்தவர்கள் பாடு தேவலாம். மற்றவர்கள் கையில் இந்தியா காசு கிடையாது. மூன்றரை 'ஸ்டர்லிங்' (ரு. 45) காகிதம்தான். அதை கப்பல் சிற்றுண்டிசாலையினர்

(5-ம் பக்கம் பார்க்க)

# மலேசியாத் தகராறு சுமுகமாகத் தீரும்

## மணிலாவில் ரொபர்ட் கென்னடி நம்பிக்கை

மணிலா, ஜன. 20

மலேசியாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையிலுள்ள தகராறுக்கு சமரசத் தீர்வு காணும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சனின் விசேஷ பிரதிநிதியாக ஈடுபட்டுள்ள அமெரிக்க அட்டர்னி ஜெனரல் திரு. ரொபர்ட் கென்னடி பிலிப்பைன்ஸ் அதிபர் மக்கபகலுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நேற்று மணிலா வந்து சேர்ந்தார். மலேசியாப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாண்பதுபற்றி மக்கப்பகலுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்துவார்.

மணிலாவில் நிருபர்களிடம் திரு. கென்னடி பேசுகையில் மலேசியா சம்பந்தமான தகராறு அமைதியான முறையில் தீரும் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார். இதுவரை நடைபெற்ற தமது முயற்சி நம்பிக்கை அளிப்பதாகவும் அவர் கூறினர்.

நாளை கோலாலம்பூர்சென்று மலேசியாப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கும் திரு. ரொபர்ட் கென்னடி அங்கிருந்து டோக்கியோ வுக்குத் திரும்பி இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோவுடன் புதன்கிழமை தமது பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவார்.

# அரபு நாடுகள் திட்டம்பற்றி கெய்ரோ பத்திரிகை

கெய்ரோ, ஜன. 20

கெய்ரோவில் நடைபெற்ற உச்சிமகாநாடு முடிவுசெய்தபடி ஒன்றுபடுத்தப்பட்ட அராபியப்படையின் தலைமைபதவியை ஐக்கிய அரபுக் குடியரசுத்தளபதி ஏற்றுள்ளார்.

அரபு நாடுகளின் இணைக்கப்பட்ட இந்தப்படை அரபு நாடுகளுக்குத் தேவையான ஆயுதங்கள், படைகள்பற்றியும் இஸ்ரேலைச் சூழஉள்ள அரபுநாடுகளுக்கு ஆக்கிரமிப்பு ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஆயத்தங்களைச் செய்வதற்கும் எந்த நிலைமைக்கும் தயாராக இருப்பதற்கும் திட்டங்களை வகுக்கும். இத்தகவலை செல்வாக்குள்ள கெய்ரோப் பத்திரிகையான 'அல் அஹ்ரம்' தெரிவித்துள்ளது.

சிரியா, லெபனன், ஜோர்டான் ஆகிய மூன்றுநாடுகள் இந்த கூட்டுப்படைத்திட்டத்தினால் அதிக பயனடையுமென்றும் அந்தப் பத்திரிகை கூறியது.

ஜோர்டான் நதியைத் திருப்பும் இஸ்ரேலின் திட்டத்துக்கு இடையூறு செய்யும் அரபுத் திட்டம் மேமாதத்தில் ஆரம்பமாகுமெனவும் 'அல்அஹ்ரம்' தெரிவித்தது.

அரபுத் தலைவர்களின் மகாநாட்டின் முடிவுகள்பற்றியும் அதன் நோக்கம்பற்றியும் அரபுநாடுகளின் வெளிவிவகாரமந்திரிகள் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம்செய்து விளக்கிக் கூறுவார்கள் என்று தெரிகிறது.

# கல்கத்தாவில் மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டன

## கலகத்தில் மாண்டவர் தொகை - 104

## 6600 பேர் காவலில் உள்ளனர்

கல்கத்தா, ஜன. 20

கல்கத்தாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்றும் தொடர்ந்து அமைதி நிலவியது. ஊரங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்பட்டுள்ளது. பெரும்பாலான பாடசாலைகள் இன்று மீண்டும் திறக்கப்பட்டன.

மேற்கு வங்க முதன்மந்திரி திரு. பி. ஸி. சென் நேற்று நிருபர்களிடம் பேசுகையில் மேற்கு வங்க வகுப்புக்கலவரத்தில் 104 பேர் மாண்டனரென்றும் இவர்களில் 39 பேர் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினல் மாண்டவர்களென்றும் கூறினர். இதுவரை 6,600 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்குமென்றும், இனியும் வகுப்புக்கலகங்கள் ஏற்படாமல் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் அவர் சொன்னர்.

### கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை

கிழக்குப் பாகிஸ்தானில் டாக்காவிலும், நாராயண்கஞ்சிலும் நிலைமை சீரடைந்து வருவதாகவும், ஊரடங்குச் சட்டம் பகலில் சில மணிநேரங்களுக்குத் தளர்த்தப்பட்டுள்ளதாகவும், கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுவருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

டாக்காவிலும், நாராயண்கஞ்சிலும் 50,000 இந்துக்கள் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஜம்மு எல்லையில் ஒரு கோஷ்டியினர் புகுந்து இருந்தியர்களைக் கொலை செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

---

# வகுப்புக்கலவரத்தில் 6,600 பேர் கைது

கல்கத்தா, ஜன. 20

கல்கத்தாவில் சமீபத்தில் இடம்பெற்ற வகுப்புக் கலவரத்தில் 34 பேர் இறந்தனர் என்றும் 6,600 பேர் கைது செய்யப்பட்டனரென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இங்கு இடம்பெற்ற வகுப்புக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் வேலை தீவிரமாக நடைபெற்றுவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் இப்போது ஊரடங்குச் சட்டம் பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளது. பெரும் கல்வி ஸ்தாபனங்கள் வழமைபோல் இயங்கத் தொடங்கியுள்ளன.

---

# லண்டனில் ஸான்ஸிபார் சுல்தான்

லண்டன், ஜன. 20

ஸான்ஸிபாரில் ஏற்பட்ட திடீர்புரட்சியினல் பதவியிழந்து தற்காலிகமாக தங்கனிக்காவில் தஞ்சம் புகுந்திருந்த ஸான்ஸிபார் சுல்தான் இப்பொழுது லண்டன் வந்துள்ளார். நேற்று மாஞ்செஸ்டர் விமானநிலையத்தில் வந்திறங்கிய சுல்தானுக்கு பிரிட்டன் தஞ்சம் அளித்துள்ளது.

# இஸ்ரேலிடம் தஞ்சம்

கெய்ரோ, ஜன 20

ஐக்கிய அரபுக் குடியரசு விமானப் படையைச் சேர்ந்த பயிற்சி விமானமொன்றைக் காணவில்லையென கெய்ரோ ரேடியோ அறிவித்தது.

ஐக்கிய அரபுக் குடியரசு விமானப்படையைச் சேர்ந்த விமானமொன்று இஸ்ரேல் எல்லைக்குள் வந்திறங்கியதாகவும் அந்த விமானத்தைச் செலுத்தி வந்தவர் இஸ்ரேலிடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும் டெல் அவிவ் ரேடியோ அறிவித்துள்ளது.

# லியாகத் அலிகான் எழுத்தும் பேச்சும்

கராச்சி, ஜன. 20

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற லியாகத் அலிகானின் பேச்சுக்கள், எழுத்துக்கள் ஆகியவைகளைக் கொண்ட தொகுப்பு நூல் ஒன்று வெளியிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

---

# விவேகானந்தர் சிலை

சென்னை, ஜன. 20

சுவாமி விவேகானந்தரின் 20 அடி சிலை ஒன்று இன்று எழும்பூரிலிருந்து ஐஸ் ஹவுஸுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. "விவேகானந்தர் இல்லம்" எனப் பெயர் இடப்பட்ட இந்த இடத்தில் இச் சிலை வைக்கப்படும். 1893-ம் ஆண்டு இந்த இல்லத்தில் இருந்துதான் விவேகானந்தர் சிக்காகோ சர்வமத மகாநாட்டுக்குப் புறப்பட்டார்.

---

# காமராஜரா? சாஸ்திரியா?

வாஷிங்டன், ஜன. 18

இந்தியப் பிரதமர் நேரு தமது பதவிப் பொறுப்பைத் தற்காலிகமாக காமராஜரிடமோ லால்பகதூரிடமோ ஒப்படைத்துவிட்டு ஆறுமாத காலம் ஓய்வெடுத்துக்கொள்வார் என்று அமெரிக்கப் பத்திரிகைகளில் ஹேஷ்யங்கள் வெளியாகியுள்ளன. நேரு, டில்லிக்கு வெளியில் இந்தியாவிலோ வெளிநாட்டிலோ ஓய்வெடுத்துக்கொள்ளலாமென அவை மேலும் கூறின.

---

# சென்னை வேகமாக செல்லும்

சென்னை, ஜன. 20

சென்னையில் மெதுவாக நகர்ந்துசெல்லும் வாகனங்கள் படிப்படியாக ஒழிக்கப்படும் என மந்திரி கக்கன் தெரிவித்தார். ரிக்ஷாக்கள், கை வண்டிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஆகியன இப்படி ஒழிக்கப்படும். டாக்ஸிகளுக்கு லைசன்ஸ் வழங்கப்படும் விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன.

# இந்துமகாசபைத் தலைவர்கள் கைது

பம்பாய், ஜன. 20

இந்துமகாசபையின் பொதுக் காரியதரிசி திரு. கோஷ் நேற்று குவாலியரில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பம்பாயில் மற்றும் சில இந்துமகாசபைத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக தடையையும் மீறி இவர்கள் ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்த முயன்றதாகக் கைதுசெய்யப்பட்டனர்.

# 'பிரச்னைகளுக்குபேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும்'

## பர்மாவில் புட்டோ கருத்து

ரங்கூன், ஜன. 20

"உலகில் எல்லா நாடுகளும் தங்களுக்கிடையிலுள்ள பிரச்னைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதும் குறிப்பாக அண்டை நாடுகளுடனுள்ள பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண வேண்டுமென்பதும் பாகிஸ்தானின் கொள்கையாகும்" என்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனாப் புட்டோ நேற்று ரங்கூனில் அவருக்களிக்கப்பட்ட ஒரு விருந்துபசாரத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பர்மா-பாகிஸ்தான் நட்புறவுச் சங்கம் அளித்த இவ்வுபசாரத்தில் ஜனாப் புட்டோ மேலும் பேசுகையில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் பிரச்னைகளைத் தீர்க்க முடியுமென்றும் பாகிஸ்தானுக்கு இந்த மனப்பான்மையிருக்கிறதென்றும் சொன்னர்.

பர்மாவிலுள்ள பாகிஸ்தானியர் நன்கு கவனிக்கப்படுகின்றனரென்றும் பர்மாவின் முன்னேற்றத்துக்காக அவர்கள் உழைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பர்மிய வெளிவிவகார மந்திரியுடன் ஜனாப் புட்டோ இரண்டாவது தடவையாகவும் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தை நட்புச் சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் இரு நாடுகளுக்கும் பொதுவான பல விஷயங்கள் பற்றி இருவரும் பேசியதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# நேருவின் பொறுப்பு சாஸ்திரியிடம்?

புதுடில்லி, ஜன 20

இந்தியப் பிரதமர் நேருவின் சுகவீனம் காரணமாக இந்திய அரசாங்கத்தின் புனரமைப்பு தவிர்க்க முடியாததொன்றாக இருக்கும் என இங்குள்ள அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

திரு. நேரு தமது பலதரப்பட்ட கடமைகளை யாரிடம் ஒப்படைப்பார் என்பது ஆவலைத் தூண்டியுள்ளது. இது சம்பந்தமாக முன்னை நாள் உள்நாட்டமைச்சர் திரு. லால் பகதூர் சாஸ்திரி, 46 வயதுடைய நேருவின் புதல்வி திருமதி இந்திரா காந்தி ஆகியோரது பெயர்கள் முக்கியமாக அடிபடுகின்றன.

சென்றவருடம் ஆகஸ்ட்மாதத்தில் மந்திரிசபை திருத்தியமைக்கப்பட்ட போது காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்துவதற்காக மந்திரிசபையிலிருந்து விலகிய திரு சாஸ்திரி அரசாங்ககட்சித் தலைவர் பதவியை திரு. நேருவிடமிருந்து பொறுப்பேற்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்காத திருமதி காந்தி வெளிவிவகார மந்திரியாக நியமிக்கப்படலாமென இரு ராஜ்ய முதன்மந்திரிகள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளதாக தெரிகிறது.

திருமதி இந்திராகாந்திதமது தந்தை நேருவின் சார்பில் பலதடவைகளில் வெளிநாடுகளுக்கு தூதுசென்றுள்ளார். இவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். தந்தையின் அலுவல்களில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்.

ஸான்ஸிபார், கென்யா ஆகிய நாடுகள் சென்ற டிசம்பரில் சுதந்திரம்பெற்றபோது திருமதி இந்திரா காந்தி அந்த நாடுகளுக்கு இந்தியா சார்பில் சென்றிருந்தார் மற்றும்பல ஆபிரிக்க நாடுகளுக்கும் இவர் விஜயம் செய்து வந்தார்.

இந்திரா மிக்க வலிமையுற்றவராக இல்லாதிருந்தபோதிலும் காங்கிரஸ் கட்சித்தலைவராக இருந்த சமயத்தில் அதிக நெருக்கடி நிலைமைகளுக்குள்ளானர்.

இவரது நியமன விஷயத்தில் திரு நேரு அதிகம் விரும்புவதாக தெரியவில்லை. இந்திரா காந்தி தமதுமகள் என்ற காரணத்தினலும் அரசியலில் இந்திரா அதிக அக்கறை கொள்ளாததாலுமே நேரு இவ்வாறு விருப்பவில்லை இதனல் இவர் மேற்குறிப்பிட்ட பதவிக்கு நியமிக்கப்படுவாரா என்பது கேள்வியாகவே இருக்கிறது.

59 வயதுடைய திருசாஸ்திரிக்கு சபை முதல்வர் பதவி நேருவின் இடத்தை அதாவது பிரதமர் பதவியைத் தேடித்தரும் வாய்ப்பை அளிக்கக் கூடியதாக இருந்தாலும் அவர் மீண்டும் மந்திரி சபையில் சேர விருப்பமற்றவராகக் காணப்படுவதாகத் தெரிகிறது.

தாம் மந்திரி சபையில் மீண்டும் சேர்ந்தாலன்றி, திரு சாஸ்திரி மந்திரி சபையில் சேர்வது குறித்து, சாஸ்திரி விலகிய போது மந்திரி சபையிலிருந்து விலகிய இரு முன்னை நாள் அமைச்சர்கள் ஆட்சேபம் தெரிவிக்கக்கூடும் என நம்பப்படுகிறது. திரு மொரார்ஜி தேசாய், திரு எஸ்.கே. பாட்டீல் ஆகியோரே இந்த இரு மந்திரிகளுமாவர்.

வெளி விவகார அலுவல்களில் சிறிதளவு அனுபவமே இருந்த போதும் நீண்ட கால பார்லிமெண்டரி அனுபவமும் அமைச்சராக இருந்த அனுபவமும் திரு. சாஸ்திரிக்கு இருப்பதால் அவருக்கு அப்பதவி கிடைக்கலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் மாரடைப்பு ஏற்பட்டுக் சுகமாகிய திரு. சாஸ்திரியின் தேகநிலை இப்போது சீராக இருக்கிறது.

திரு நேரு தற்போது ஒதுக்குப் புறமான இடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். டாக்டர்கள் ஒவ்வொரு நாளும் அவரைப் பரிசோதனை செய்து வருகிறார்கள். சென்ற திங்கட்கிழமை டாக்டர்கள் வெளியிட்ட கருத்துப்படி திரு நேருவின் தேகநிலையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

---

# படைகுறைப்பு மகாநாடு

ஜெனிவா, ஜன. 20

ஜெனிவாவில் நாளை மீண்டும் ஆரம்பமாகவிருக்கும் 17 நாடுகளைக் கொண்ட படைகுறைப்பு மகாநாட்டில் கலந்துகொள்ளும் ரஷ்யப் பிரதிநிதி ஸராபகின் நேற்று ஜெனிவா வந்துசேர்ந்தார்.

படைகுறைப்புக்கான மேற்கு நாடுகளின் புதிய யோசனைகள் எதையும் தாங்கள் பரிசீலனை செய்யத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். தாங்கள் புதிய யோசனை எதையும தெரிவிக்கவிருப்பதாக அவர் கூறவில்லை.

ஏற்கனவே ஜெனிவா வந்துள்ள அமெரிக்கப் பிரதிநிதி படைகுறைப்புக்கு தாம் புதிய யோசனை தெரிவிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

---

அஹமதபாத், ஜன. 20

எம். சி. சி. கோஷ்டிக்கும் மேற்கு பிராந்திய கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெற்ற மூன்றுநாள் கிறிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

# புரட்சி வீரர் லெனின்

— இ. பானுதேவன் —

**வீரர் லெனின் மறைந்து இன்றுடன் நாற்பது வருடங்கள் முடிகின்றன. அவரது புகழ் இன்னும் மறையவில்லை. உலகின் பல பாகங்களிலும் அவரை நினைவுகூரும் இத்தினத்தில் அவரைப்பற்றிய இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

நாற்பது வருடங்கள் கடந்துவிட்டன. எனினும், அவரின் நாமம் மறையவில்லை. 1924-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ந் திகதி புரட்சி வீரர் லெனின் உயிர்நீத்தார். ஆனால் அவரின் தத்துவக் கருத்துகளும், செயலின் விளைவுகளும் இன்றும் உயிர்த்துடிப்புடன் உள்ளன. இன்றைய பிரச்சினைகள் பலவற்றைப் புரிந்துகொள்ள அவை உதவுகின்றன. எதிர்காலத்துக்கான வழிகாட்டிகளாக விளங்குகின்றன. பொதுவுடைமையின் தந்தை கார்ல் மார்க்ஸ் ஆவர்; லெனின் அவருடைய நேரடியான வாரிசு ஆவர். பொதுவுடைமைத் தத்துவம் மார்க்சின் சாதனையாகும்; பொதுவுடைமைப் புரட்சி லெனினின் வீரச் செயலாகும். இவரின் தலைமையில் முதலாவது சோஷலிசப் புரட்சி நடைபெற்றது. உலக முதலாளித்துவம் என்னும் சங்கிலி ரஷ்யாவில் முதன்முதலாக அறுந்தது. இச்சம்பவம் உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும் சோஷலிச உலகை நோக்கி சமுதாயப் போக்கு அமையத் தொடங்கியது. 1848-ல் மார்க்ஸ் கூறிய வரலாற்று நியதி சரியானது என்பதை லெனின் 1917-ல் நிரூபித்தார்.

அவரின் பிறப்புப் பெயர் விளாடிமீர் இலிச் யூலியனோவ்; அவரின் இறவாத புகழுடைய நாமம் லெனின் ஆகும். 1870, ஏப்ரல் மாதம் 10-ந் திகதி ரஷ்ய நாட்டின் வொல்கா நதி ஓரத்திலுள்ள சிம்பேஸ்க் என்னும் இடத்தில் பிறந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ரஷ்ய சாம்ராச்சியம் பெரிய பிரச்சினைக்கு உள்ளாகியது. வெளிநாட்டில் முன்னேற முடியாத நிலையை அடைந்தது. ஐரோப்பிய வல்லரசுகள் ரஷ்யாவுக்குத் தடையாக விளங்கின. உள்நாட்டில் சமுதாய அமைப்பு உளுத்துப்போன நிலையில் இருந்தது. பெருந்தொகையான மக்கள் அல்லலுற்றனர். நிலப்பிரபுத்துவத்தினால் விவசாயிகள் நிலைகுலைந்தனர்; நிலம் இல்லாது தவித்தனர். பட்டணங்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகினர். முதலாளிகள் சுரண்டினர்; வேலை நிலைமைகள் படுமோசமாக இருந்தன; வேதனம் போதாதிருந்தது; வீட்டு வசதி கிடையாது; பல போர்களினால் போர்வீரர்கள் அதிருப்தி அடைந்தனர்; மக்களின் வாழ்க்கை நிலைமையும் வீழ்ச்சி அடைந்தது; வறுமையின் கோரப்பிடி மக்களை வாட்டி வதைத்தது; ஆட்சியாளர் அக்கறையற்றவராய் இருந்தனர்; அரசியல் சுதந்திரம் பெயரளவிலும் இருக்கவில்லை; ஸார் மன்னர்களின் சர்வாதிகாரம் தலைவிரித்தாடியது; ரஷ்ய சாம்ராச்சியத்தில் வாழ்ந்த பல்வேறு தேசிய இனங்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்தன; பெரிய ரஷ்ய இனம் சிறுபான்மை இனங்களை அடக்கி ஆண்டது.

இத்தகைய சூழ்நிலை லெனினின் இளமையில் நிலவியது. உயர்தரக் குடும்பத்தில் பிறந்தால், ஒழுங்காகக் கல்வி பெற்று வந்தார். அக்காலத்தில் பல அரசியல் இயக்கங்கள் உருவாகின. உணர்ச்சி மிகுந்த வாலிபர் ஸார் மன்னரில் ஆத்திரம் கொண்டனர். அரசனை ஒழித்தால் விமோசனம் கிடைக்குமென நினைத்தனர். அரசனுக்கு எதிராகப் பல சதிகள் தோன்றின. லெனினின் மூத்த சகோதரரான அலெக்சாந்தர் சதிக் குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளானர். அப்பொழுது லெனினுக்கு வயது பதினேழாகும். அவரின் வாழ்க்கையில் இச்சம்பவம் முக்கியமானதாகும். நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் மார்க்கம் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டார். அடக்குமுறைக்குப் பரிகாரம் அரசியல் கொலை அல்ல என்பதை உணர்ந்தார். இதே காலத்தில் காசான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்வி பயின்றார். அப்பொழுது அரசியலையும் கற்றார். இரகசியமாகப் பரவிவந்த மாக்சிச தத்துவங்களைக் கற்பதில் ஈடுபட்டார். மாணவர் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டதற்காக ஒரு வருட காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பதினேழு வயதில் போராடத் தொடங்கிய லெனின் 47-வது வயதில் புரட்சிக்குத் தலைமை தாங்கினார். பின்பு, ரஷ்யத் தலைநகரான செயின்ற் பீற்றஸ்பேக்கிற்குச் சென்று சட்டக் கல்வி பயின்றார். நியாயவாதியாகத் தொழிலை ஆரம்பித்த இவர் விரைவில் அதைக் கைவிட்டார். 23-வது வயதில் அரசியலைத் தனது வாழ்க்கைப் பணியாக் கொண்டார். 54-வது வயதில் இறக்கும் வரைக்கும் அதற்காகவே உழைத்தார்.

சமுதாயமாற்றத்தின்மூலம்மட்டும் நாட்டுமக்கள் வாழ்வுபெற முடியும். இதுவே மாக்சிச கருத்தாகும். இதை தொழிலாளர்களிடையே பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார். சோஷலிச கழகங்கள் பல இரகசியமாக இயங்கின. அவற்றில் உரையாற்றினார்; விவாதங்களில் ஈடுபட்டார். தொழிலாளர்களுக்குத் தத்துவ வகுப்புகள் நடாத்தினர். மன்னனை ஒழிப்பதன் மூலம் மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்காது; சமுதாய அமைப்பு மாறவேண்டும் என்பதை வலியுறுத்தினர். பிரபுத்துவ, முதலாளித்துவ சக்திகளை முறியடிக்க வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப்படும் மக்கள் ஆகிய அனைவரும் ஒன்று திரள வேண்டும். தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் புரட்சி வெற்றிபெறுமென லெனின் கருதினர். இக் கருத்துக்களை வலியுறுத்தும் பிரசுரங்களை வெளியிட்டார்.

1894-ல் கடைசி சார் அரசனான இரண்டாவது நிக்கலசின் ஆட்சி ஆரம்பமாகியது. விரைவில் அடக்குமுறையும் அதிகரித்தது. லெனின் அங்கம் வகித்த சமூக சனநாயக வாதிகளின் கட்சி தலைமறைவாகவே இயங்கியது. சிறைச்சாலையும் தேசப்பிரஷ்டமும் அவரை அடுத்தடுத்து நாடின. ரஷ்யாவிலிருந்து பணிபுரிவது கஷ்டமாகியது. 1900-ம் ஆண்டு தொடக்கம் லெனின் வெளிநாடுகளில் வாழ்ந்தார்.

வெளிநாட்டிலிருந்து ரஷ்யப் பொதுவுடமை இயக்கத்துக்கு வழிகாட்டி வந்தார். இஸ்கிரா (தீப்பொறி) என்னும் பத்திரிகையைப் பிரசுரித்தார் இப்பத்திரிகை களவாக ரஷ்யாவிற்குள் கொண்டு செல்லப்பட்டது. பின்பு புரட்சிக்குத் தலைமை தாங்கிய பொல்சுவிக் கட்சியை 1903-லிருந்து வளர்த்து வந்தார். 1905-ல் ஏற்பட்ட புரட்சி தோல்வியடைந்தபொழுதிலும் லெனின் மனம் தளரவில்லை முதலாவது உலகப்போரின் பொழுது, அடுத்த சந்தர்ப்பம் கிடைத்தது. உலகப் போரினால் ஏற்பட்ட நெருக்கடி உளுத்துப்போன சமுதாயத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சார் அரசன் விழ்ந்தான். முதலாளித்துவ கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றின. இச் சம்பவம் 1917 பெபரவரியில் நடைபெற்றது. லெனின் ரஷ்யாவுக்குத் திரும்பி வந்தார் பெபரவரிப் புரட்சியினால் ஏற்பட்ட ஆட்சி முதலாளித்துவ ஆட்சியாகும். இதனால் ரஷ்யாவின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. எனவே, தொழிலாள வர்க்கம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றவேண்டும் என லெனின் வாதாடினர். 1917ஏப்ரல்மாதம் தொடக்கம் லெனின் தொழிலாள வர்க்கப்புரட்சிக்கான திட்டத்தை வகுத்தார். அப்பொழுது ரஷ்யாவில் இருந்த கெரென்ஸ்கி அரசாங்கம் எதையும் செய்யும் ஆற்றலற்றதாக இருந்தது. பழைய பிரச்சினைகள் தொடர்ந்திருந்தன. மக்களிடையே மறுபடியும் அதிருப்தி நிலவியது. லெனின் தலைமையில் பொல்சுவிக்கட்சி "உணவு, நிலம், சமாதானம்" என்ற புரட்சிக் கோஷங்களை எழுப்பியது. தொழிலாளர், விவசாயிகள், போர்வீரர் ஆகியோர் பொல்சுவிக்கட்சியின் செங்கொடியின் கீழ் அணி திரண்டனர். 1917 ஒக்டோபர் 25-ந் திகதி லெனின் தலைமையில் பொல்சுவிக்கட்சி அரசாங்கத்தை கைப்பற்றியது. உலக வரலாற்றில் முதன் முதலாகத் தொழிலாள வர்க்கம் அரசியல் அதிகாரம் பெற்றது.

முதலாவது தொழிலாளர் அரசின் தலைவரானார் லெனின். உற்பத்தி, பணமாற்று, பங்கீட்டு சாதனங்கள் எல்லாவற்றையும் பொதுவுடமையாக்கினர். நிலப்பிரபுக்களின் நிலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. தொழிற்சாலைகளில் தொழிலாளர் நிர்வாகம் ஏற்பட்டது. அடக்குமுறை ஒழிக்கப்பட்டது. உழைப்பாளிகளின் சபைகளான சோவியத் சபைகள் அரசியல் அமைப்பில் பிரதான இடத்தைப் பெற்றன. சிறுபான்மை இனங்களுக்கு சகல உரிமைகளும் பூரண சமத்துவமும் வழங்கப்பட்டது. ஜெர்மனியுடன் நடைபெற்ற போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தினர். இவரின் பணிக்குப் பல தடைகள் ஏற்பட்டன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இவருக்கு விரோதமாகப் பிற்போக்குச் சக்திகள் செயலாற்றின. கப்பிளான் என்ற பெண்மணி 1918ல் லெனினைச் சுட்டுக் காயப்படுத்தினர். ஆனால் உயிர் தப்பினர். எதிர்புரட்சி தோன்றியது. உள்நாட்டுப் பிற்போக்காளருக்கு அன்னியபடைகள் உதவி புரிந்தன. ரஷ்யப் பிரதேசங்களை பல கோணங்களிலிருந்தும் தாக்கினர். ஆனால் நாட்டு மக்களின் வீரம் செறிந்த போராட்டம் எதிர்ப்புரட்சியை தோற்கடித்தது. உள்நாட்டுப் போரில் எதிரிகள் மண் கவ்வினர். 1921-ம் ஆண்டு லெனின் நாட்டின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டார்.

சோஷலிசம் என்பது ஒரு சர்வ தேசிய சமுதாய அமைப்பாகும். எனவே, சோஷலிசத்திற்கான மாற்றத்தின் முதலாவதுபடி ரஷ்ய சோஷலிசப் புரட்சி என்பது லெனினின் கருத்தாகும். சர்வ தேசப் பொதுவுடமை இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து உழைத்தார். 1919 ல் இவரின் தலைமையில் மூன்றுவது அகிலம் நிறுவப்பட்டது. உலகத் தொழிலாளவர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு இது பெருந் தொண்டாற்றியது. 1922-ல் இருந்து லெனினின் உடல்நிலை பாதிக்கப்பட்டது, அடிக்கடி உடல் நலம் குன்றியது. இறுதிவரைக்கும் லெனின் சலியாது உழைத்தார். 1924-ல் மரணம் சம்பவித்தது. மனிதகுலம் ஒரு மாமேதையை இழந்தது. ரஷ்யாவில் மட்டுமல்லாது அகிலம் முழுவதிலும் தொழிலாள வர்க்கம் துக்கம் அனுஷ்டித்தது. அவரின் இறுதி மரணக் கிரியைகள் ஜனவரி மாதம் 27ந் திகதி நடைபெற்றன. அன்று உலகத் தொழிலாள வர்க்கம் ஐந்து நிமிடங்களுக்கு மௌனம் அனுஷ்டித்தது. அப்பொழுது சகல வேலைகளும் ஸ்தம்பித்தன. உலகத் தொழிலாளவர்க்கம் இவ்வாறு கௌரவம் செலுத்தியது இதுவே முதற் தடவையாகும். இதுவரை வேறெவருக்கும் இத்தகைய துதி செலுத்தப்படவில்லை.

# "யு. என் .பி. யை எம்மால் வெற்றி கொள்ள முடியும்"

## பொரளை தேர்தல் காட்டிவிட்டது என்கிறார் விவியன்

கொழும்பு, திங்கள்

'இடதுசாரி ஐக்கிய முன்னணி பொரளை இடைத்தேர்தலில் யு. என். பி. யுடன் எதிர்த்து நின்றபோது அது ஒரு அரசியல் போட்டியாகமட்டும் இருக்கவில்லை. அது லஞ்ச ஊழல்களுக்கெதிராகவும் ஒரு போட்டியாக இருந்துள்ளது.'

இவ்வாறு பொரளை இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணி அங்கத்தவர் திருமதி விவியன் குணவர்தன தெரிவித்துள்ளார்.

திருமதி விவியன் குணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:-

பொரளை இடைத்தேர்தலில் யு. என். பி.யினர் அதிகமான ஊழல் நடவடிக்கைகளைக் கையாண்டனர்.

மந்திரவாதிகள் அதாவது கொழும்பு மேயரும் யு. என். பி. அங்கத்தவர்களும் இந்தத் தொகுதி வேலைகளில் திடீரென அதிக அக்கறை காட்டத் தொடங்கினர்கள்.

இருளில் வாழ்ந்த பொரளை மக்களுக்குத் திடீரென மின்சாரவெளிச்சம் கொடுக்கப்பட்டது. வீடுகள் கனவில் காண்பதுபோல் விரைவில் கட்டப்பட்டன. முன் திட்டமிடப்படாத இடங்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டன. அசுத்தம் நிறைந்த வடிகால்கள் சுத்தப்படுத்தப்பட்டன. இவையெல்லாம் மேயராலும் அவரது சகாக்களாலும் நடத்தப்பட்டன.

யு. என். பி. அபேட்சகரும் அவரது ஆதரவாளர்களும் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் ஆள்மாருட்டம் செய்தனர் என இப்போது கூறிவருகிறார்கள். இந்தவித வேலைகளில் ஈடுபடக்கூடியவர்கள் யார் என்பதை உணர்ந்து பார்க்வேண்டும். இடதுசாரி ஐக்கிய முன்னணியினரா அல்லது முதலாளிவர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்ட யு. என். பியினரா நேர்மையான முறையில் தமது பிரசாரத்தைச் செய்தார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் யு. என். பி. தனது கட்சிப் பணத்தில் பெருந்தொகையான பகுதியை இந்த இடைத்தேர்தலில் செலவு செய்தது. சில ஆள்மாருட்ட சம்பவங்கள் இடம்பெற்றதென்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். எனது ஆதரவாளர்களில் சிலர் இவ்விதம் செய்திருக்கலாம். ஆனல் இவ்விதம் செயவதற்கான இயக்கமொன்றும் இருந்திருக்கவில்லை. பொரளையில் எனது வெற்றி, யு. என். பி. யினருக்கு இடதுசாரி ஐக்கியமுன்னணியினர் எதிர்காலத்தில் நல்ல எதிர்ப்புக் கொடுக்க முடியும் என்பதை தெட்டத் தெளிவாக தெரிவித்துவிட்டது. யு. என். பி யை எம்மால் வெற்றிகொள்ளவும் முடியும் என்பதையும் இது நிரூபித்துவிட்டது.

பொரளையிலுள்ள ஏழை மக்களுக்கு வேலைகள் தேடித் தருவதாக யு. என். பி வாக்குறுதியளித்திருந்தது. இவ்விதம் வாக்குறுதியளிப்பதனால் வாக்குகளைப் பெறலாம்என யு. என் பி. முயற்சி செய்தது.

1662-ம் வருட மாநகரசபைத் தேர்தலில் மாநகரசபைக் கூலி வேலைக்கென 9000 விண்ணப்பப்பத்திரங்கள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இதே போன்று மாநகரசபைப் பகுதியில் பொரளை வாக்களர்களுக்கு ஒவ்வொரு யு. என். பி. அங்கத்தவராலும் நூற்றுக்கணக்கான மனுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன: தேர்தலுக்கு முதல் நாளான ஜனவரி 17-ம் திகதி விண்ணப்ப திகதி முடிவு எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நானும் இவ்வித மனுப்பத்திரங்களில் சிலவற்றைப் பெறுவதற்காக மாநகரசபைக்குச் சென்றேன். ஒரு விண்ணப்பப் பத்திரம் மட்டுமே எனக்குக் கொடுக்ககப்பட்டது. ஆனல் யு என். பி. அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் இவ்விதவிண்ணப்பத்திரங்களில் 100கொடுக்கப்பட்டன என்பது எனக்குத் தெரியும்.

# தொழிற் சங்க இயக்கங்களில் பங்குபற்ற தடை

## ஆசிரிய மாணவர்களுக்கு அரசாங்கத்தின் நிபந்தனை

கொழும்பு, திங்.

ஆசிரிய மாணவர்களாக விரைவில் நியமிக்கப்படவிருப்பவர்கள் எந்தவித தொழிற் சங்க நடவடிக்கையிலும் இறங்க முடியாதபடி தடைசெய்யப்படுவர்.

10, 000 ஆசிரிய மாணவர்கள் நியமனம் சம்பந்தமாக வகுக்கப்படும் விதிமுறைகளில் இதுவும் சேர்க்கப்படவிருக்கிறது.

இந்த நிபந்தனையை மீறும் ஒரு ஆசிரிய மாணவர் வேலையிலிருந்து நீக்கப்படுவாரென கல்வி இலாகா உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

10,000 பேருக்கு மேற்பட்டவர்கள் ஆசிரிய மாணவர் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார்களென்றும் இறுதித் தேர்வுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களின் பெயர் பட்டியல் ஒன்று ஏற்கனவே வெளியாகியுள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் 70 மாணவ ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு ஆசிரிய மாணவருக்கும் ரூ 100 மாதச் சம்பளப்படியாக வழங்கப்படும்.

— —

# லாவோசில் மீண்டும் சண்டை

வியன்டைன், ஜன, 20

லாவோசில் இடதுசாரிப் படைகளுக்கும் வலதுசாரிப் படைகளுக்கும் இடையில் மீண்டும் இம்மாதம் 14-ந் திகதி தொடக்கம் சண்டை நடைபெற்றுவருவதாக வலதுசாரி வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்று தெரிவித்தது. இச்சண்டைகளில் 23 இடதுசாரிப்படை வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 21-1-64

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராம சஞ்சிகை.

இரவு 6-45 புல்லாங்குழல், 7-00 இருபதுகேள்விகள், 7-30 'குலக்கொடி' — நாட்டிய நிகழ்ச்சி (மறுஒலிபரப்பு), 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, நேயர்விருப்பம், நிலையஒலிப்பதிவு, 8-30 பேச்சு — நம்முரான் நோன்பின் நோக்கம், இஸ்லாமியகீதங்கள். 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 கதம்பம், 7-45 ரேடியோ செய்திமலர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு, 2-40 பொன்னெளிர் பாரதம்.

மாலை 5-15 வாத்தியக் கோஷ்டி, 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சி.

இரவு 7-30 நாடகத்தில் புதுமை — பேச்சு, 7-45 திருப்பாம்புரம் என். சிவசுப்பிரமணியம்பிள்ளை — பாட்டு, 9-15 மெல்லிசை, 9-30 'நெஞ்சம் மறைந்த நினைவு' — நாடகம், 10-00 ஒலிமலர் — இலக்கிய சஞ்சிகைநிகழ்ச்சி.

---

நியூயோர்க், ஜன. 20

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யு தாண்ட் இம்மாத இறுதியல் கானு, கினி உட்படப் பல ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப்பிரயாணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

# மாநகரசபை கமிட்டிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பெற்ற மாநகரசபைக் கமிட்டிகள் விபரம் வருமாறு:-

**சுகாதாரக் குழு**

திருவாளர்கள் ஆ. துரைராஜசிங்கம், நா. த. செல்வத்துரை, அ. நடராஜா, எம். என். பேரின்பநாயகம், எம். எஸ். சேவியர், ஜே. எஸ். அழகையா.

**மராமத்து குழு**

திருவாளர்கள் எஸ். சி. மகாதேவா, ஏ. நடராஜா, ஆ. துரைராஜசிங்கம், எஸ். ஏ. நீக்கிலாப்பிள்ளை, எஸ். நாகராஜா, ஆ. யோ. இராஜசூரியர்.

**நிதி கட்டம்**

**பொது அலுவல்கள்**

மாநகரசபை முதல்வர் நீங்கலாக, எஸ். சி. மகாதேவா, எம். எம். சுல்தான், பீ. ச. சோமசுந்தரம், கே. வி. தெய்வேந்திரம், அ. த. துரையப்பா.

**மின்சார குழு**

திருவாளர்கள் த. கந்தையா, வி. எம். எம். அபுசாலி, நா. த. செல்லத்துரை, ஜே. எஸ். அழகையா, எஸ். ஏ. நீக்கிலாப்பிள்ளை, கே. வி. தெய்வேந்திரம்.

---

# 'செல்வந்தர் கைவிட்டனர்'

## யு. என். பி. அபேட்சகர் கவலை

கொழும்பு, திங்கள்

'பொரளை இடைத் தேர்தல் முடிவு எனக்கோ எனது கட்சிக்கோ கிடைத்த தோல்வியல்ல' என யு. என். பி. சார்பில் போட்டியிட்ட டாக்டர் ஆர். பி. லெனோரா தெரிவித்தார்.

'இந்தத் தேர்தலில் பெரிய அளவில் ஆள்மாருட்டம் இடம் பெற்றது. எனக்குக் கிடைத்த வாக்குகள் நேர்மையான வகையில் பதிவானவை, என்றும் டாக்டர் லெனோரா கூறியுள்ளார்.

டாக்டர் லெனோரா மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு 7-ல் உள்ள செல்வந்தர்களும் எனது தோல்விக்கு ஒரு காரணம். இப்பகுதியிலுள்ள 40 சத வீதமான வர்கள் கூட வாக்களிக்கவில்லை. தேயிலை அல்லது றப்பர் விலை காற்சதம் குறைந்தாலும் கவலைப்படுபவர்கள் அவர்கள்தான். இருந்தும் தமக்கு சமூகத்திலுள்ள கடமை பற்றி இவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை. இடதுசாரி அரசாங்கம் அவர்களது சொத்துக்களைத் தேசிய மயமாக்கி அவர்களை தமது இடங்களிலிருந்து விரட்டிய பின்னர் தான் நிலைமையை உணர்வார்கள். இதற்கு நேர்மாறாக வனத்த முல்லையிலுள்ள கல்வியறிவற்ற ஏழை மக்கள் முழுதாக வாக்களித்தார்கள்.

கம்யூனிஸ்ட்கட்சி, எம். ஈ. பி. சமசமாஜக்கட்சி ஆகிய கட்சிகளின் ஆதரவுடனும் சுதந்திரக் கட்சியின் அனுதாபத்துடனும் ஆக 12,528 வாக்குகளை பெற்ற திருமதி விவியன் குணவர்தனவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தார்மீக வெற்றி என்னுடையதே. எனது வாக்காளர்கள் உண்மையான யு. என். பி. வாக்காளர்கள். இந்த விஸ்வாசம் அசைக்க முடியாதது.

---

# 20,000 மக்கள் வீடிழந்தனர்

போர்மோசா, ஜன. 20

போர்மோசாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 104 பேர் மாண்டதாகவும் 500-க்கு அதிகமானோர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. இருபதினாயிரத்துக்குமதிகமான மக்கள் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.





தன் குடும்பத்திற்கு சமைத்து, இடித்தல், அரைத்தல் போன்ற கடினமான வேலைகள் செய்து, ஆடைகள் துவைத்து, பிள்ளைகளையும் வளர்த்தெடுத்து, அல்லும் பகலும் உழைக்கும் அவளுக்கு குன்றாத பெலனும் சக்தியும் அவசியம். ஆகவே அவளுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவளை அனுதினமும் சளைக்கா சக்தியுடன் சுகமாக இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

**மாவுப் பொருள்**
**சர்க்கரைப் பொருள் அற்ற,**
**B விட்டமின் நிறைந்த,**
**தூய்மையான,**
**தாவர உணவுப்**
**பொருள்.**




# மாமைட்

78



**அரைச்சலார்**

20-1-64 தொடக்கம்
31-1-64 வரைக்கும்

**குகன் ஸ்ருடியோ**

சாவகச்சேரி 1891


**கேள்விப்பத்திர அறிவித்தல்**

கிளிநொச்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்திற்குக்கிட்டங்கியும் கந்தோரும் அடங்கிய ஒரு கட்டிடம் கட்டுவதற்குக் கேள்விப் பத்திரங்கள் பலநோக்குகூட்டுறவுச்சங்கங்களிலிருந்தும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்தும் 7-2-64 பகல் 12 மணிவரை எனது அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் எனது அலுவலகத்திலிருந்து பெற்ற படிவங்களில் அனுப்பப்பட வேண்டும். கட்டிட மாதிரிப்படமும் செலவின விபரமும் எனது அலுவலகத்தில் பரிசீலனைக்குப் பெற்றுக் கொள்ளலாம். யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி (பரந்தன் கிளை)யில் ரூபா 50/- கேள்விப்பத்திர வைப்புப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சி காண்பிப்பவருக்கே கேள்விப் பத்திர படிவங்கள் வழங்கப்படும்.

மு. சின்னத்தம்பி,
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்,
தென் யாழ்ப்பாணம்.
கூட்டுறவு அலுவலகம்,
பரந்தன், 10-1-64. 1760

---

**வரி விளம்பரம்**

**வைத்தீவரஸ்வித்தியாலயம், யாழ்ப்பாணம்**

**சேமநலவிருத்திச் சபை**

மேற்படி சபைக்குப் பெற்றோரின் பிரதிநிதிகள் இருவரைத் தெரிவு செய்வதற்குப் பெற்றோர்களின் கூட்டமொன்று வித்தியாலய மண்டபத்தில் (23-1-64) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். பெற்றோர்களைச் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ச. அம்பிகைபாகன்
அதிபர்
20-1-64 1893

---

**The College of Higher Studies,**
**Anaipanthy, Jaffna**

Wanted a Home Science Graduate or Irwin College Diploma Holder. Call immediately.
1892 Registrar.

---

**ஜுவாறன்**

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

ஏற்பதில்லை. காசு கொடுத்த வருக்கும் அங்கு பசியாறச் சாப்பிட ஒன்றுமில்லை. 'ஸ்டாக் இல்லை' என்று அந்த சிப்பந்தி மிகப் பண்புடன் கூறுகிறார். கப்பலும் மிகத் தாமதமாகப் புறப்பட்டதால் பசியால் பலரும் துடித்தனர். பிரயாணிகளை ஏன் இரு அரசாங்கங்களும் இப்படி இம்சைப்படுத்த வேண்டும்? மனிதாபிமானத்துடன் நடத்த வழிசெய்ய முடியாதா?

* * *

கல்லையொப்பானைக் கற்றூர்க்
கொர் அமுதினை
மலையொப்பானை மணிமுடி
யூன்றிய
அலையொப்பானை அரத்
துறை மேவிய
நிலையொப்பானைக் கண்டீர்
நாந்தொழுவதே.
— திருநாவுக்கரசர்

---

**வியாபாரம் பெருக**
**விளம்பர செய்க**

# போர்மோஸா பூமியதிர்ச்சியில் 100-க்கு மேலானோர் பலி

## 77 பேர்களைக் காணவில்லை

தைபே, ஜன. 20

போர்மோஸாவில் ஏற்பட்ட பெரும் பூமியதிர்ச்சி காரணமாக இதுவரை 100-க்கு மேற்பட்டோர் மாண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மற்றும் 77 பேர்களைக் காணவில்லை என்றும் 500-க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

நாட்டின் மத்திய, தென் பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாயும், ஆயிரக்கணக்கானோர் வீடிழந்திருப்பதாயும், அரிசி கரும்புச்சாகுபடிகள் நாசமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

கடந்த 20 வருடங்களில் இவ்வளவு பெரிய பூகம்பம் ஏற்பட்டதில்லையாம்.

## மகாநாயக தெரிவு

கொழும்பு, ஞாயிறு

மல்வத்தை பௌத்தபீடத்தின் 22-வது மகாநாயக தேரோவாக அமுதகுரு அமுலுகம அசநாயகதேரோ ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

## சிவஞானம் புறப்பட்டார்

சென்னை, ஜன. 20

தமிழரசுக் கழகத் தலைவர் ஸ்ரீ ம. பொ. சிவஞானகிராமணியார் கோலாலம்பூரில் நடைபெறும் தமிழ் இலக்கிய விழாவில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இன்று மலேஷியா புறப்பட்டார்.

## தேசபிதாவுக்கு அர்ப்பணம்

புதுடில்லி, ஜன. 20

மலையாள மொழியில் தயாரிக்கப்பட்டுவரும் முதல் கலைக் களஞ்சியத்தின் 2 3, 4-வது தொகுதிகள் அவற்றின் ஆசிரியர்கள் சார்பாக ராஜ்காட்டில் தேச பிதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் 1200 பக்கங்கள்க்கு மேற்பட்ட 8 தொகுதிகள் வெளியிடப்பட விருக்கின்றன. இதன் முதல்தொகுதி 1957-ம் ஆண்டு காந்திஜி சமாதியில் அர்ப்பணிக்கப்பட்டது

## ராமமூர்த்தி காலமானார்

ஹைதரபாத், ஜன. 20

முன்னாள் சென்னை அரசாங்கத்தின் பிரதம காரியதரிசியான திரு. எஸ். வி. ராமமூர்த்தி இன்று ஹைதரபாத்தில் காலமானார், அவருக்கு வயது 70. பம்பாய் கவர்னராகவும், உத்யப்பூர் திவானாகவும் திரு. ராமமூர்த்தி பதவி வகித்தவர்.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (நாவலப்பிட்டியா) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) — மொடேர்ன் (பதுளை) — விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) — ஜெமினி (குருநாகலை)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!
உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன் - ராமமூர்த்தி

தயாரிப்பு: ஜி. என். வேலுமணி — டைரக்ஷன்: கே. சங்கர்

மனோகரா (யாழ்ப்பாணம்) — சிவாஜி கணேசன்— சரோஜாதேவி நடித்த பாகப்பிரிவினை


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## படகு விபத்து: 20 பேர் பலி

கல்கத்தா, ஜன. 20

கல்கத்தாவிலிருந்து 40 மைல் தூரத்தில் ஏற்பட்ட படகுவிபத்தொன்றில் 4 பேர் பலியானார்கள். 16 பேரைகாணவில்லை 70யாத்திரீகர்களுடன் சென்ற இப் படகிலிருந்து 50 பேர் மட்டும் காப்பாற்றப்பட்டனர்.

## "ரஷ்யாவந்து ஓய்வெடுங்கள்"

—குருஷ்சேவ்

புதுடில்லி, ஜன. 20

சோவியத்யூனியனுக்கு வந்து ஓய்வெடுத்துக்கொள்ளுமாறு ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ், திரு. நேருவை அழைத்திருக்கிறார். திரு. குருஷ்சேவ் இது சம்பந்தமாக திரு. நேருவுக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

பிரதமர் நேருவின் உடல்நிலையை எடின்பரோவைச் சேர்ந்த பிரபல வைத்திய நிபுணர் டாக்டர் கெமடுன் இன்று பரிசோதனை செய்தார். ஏற்கனவே அவரைக் கவனித்துவரும் வைத்தியர்கோஷ்டியின் முடிவை டாக்டர் கெமடுன் ஊர்ஜிதம் செய்து உடல்நிலை நன்கு தேறிவருவதாய்த் தெரிவித்தார்.

பிரதமர் நேருவின் உடல்நிலை குணமடைய வேண்டுமென பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரையும் செய்தி அனுபபியிருக்கிறார்.

## 'இடதுசாரி முன்னணியால்தான் முடியும்'

—பிலிப்

கொழும்பு, திங்கள்

'இடதுசாரி ஐக்கிய முன்னணியினரால்தான் யு. என். பி. யைத் தோற்கடிக்க முடியும் என்பதை பொரளை இடைத்தேர்தல் நிரூபித்துவிட்டது' என திரு. பிலிப் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியில் மக்கள் நம்பிக்கை இழந்துவருகிறார்கள் என்பதை நிக்கவரட்டியா இடைத் தேர்தல் தெரிவித்ததென்றும் யு. என். பி. யை சுதந்திரக் கட்சி இனி ஒரு போதும் தோற்கடிக்க முடியாதென்றும் திரு. பிலிப் மேலும் கூறியுள்ளார்.

இடதுசாரி ஐக்கிய முன்னணி அபேட்சகர் பிரசாரத்தில் திறமைவாய்ந்தவர்; உழைப்புமிக்கவரென்றும் அதிகமான இளம் வாக்காளரின் வாக்குகள் இடதுசாரி ஐக்கிய முன்னணியினருக்குக் கிடைத்ததாகவும் திரு. பிலிப் தெரிவித்தார்.

## 428 சேலைகள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, திங்கள்

கொழும்பு துறைமுகத்திலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் 7,500 ரூபா பெறுமதியான 428 'வொயில்' சேலைகளை கொச்சிக்கடையிலுள்ள ஒரு வீட்டில் சப் இன்ஸ்பெக்டர் விஜயவர்த்தன தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று கைப்பற்றியது.

இது சம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். துறைமுக கமிஷனைச் சேர்ந்த லொறி மூலமே கடத்தல் நடைபெற்றிருப்பதாக பொலிசார் நம்புகின்றனர்.

# "எங்கிருந்தாலும் இப்பகுதி மக்களுக்கு சேவை செய்வேன்"

## சேவைநலம் பாராட்டுவிழாவில் முன்னாள் தென்மராட்சி காரியாதிகாரி

கொடிகாமம், திங்.

"தென்மராட்சி மக்கள் அரசாங்க ஊழியர்களுக்கு நூற்றுக்கு நூறு விதம் ஒத்துழைப்பு வழங்கும் இயல்பு வாய்ந்தவர்கள். இப்பகுதியில் ஆக்க வேலைகளுக்கு எவ்வளவோ இடமுண்டு. கலைப்பண்பு நிறையவுண்டு. நான் எங்கிருந்தாலும் இப்பகுதி மக்களின் சிறந்த பண்பை மறக்கமாட்டேன். அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்யத்தவற மாட்டேன். எனது இடத்திற்கு வந்திருப்பவர் கடமை தவருதவர். தமிழ் பற்றுடையவர்; இவர் கிடைத்தது இப்பகுதி மக்களின் தவப்பயன்".

மீசாலை வடக்கு மக்களால் அளிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்துப் பேசும் போது தென்மராட்சி முன்னாள் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார். மீசாலை வடக்கு வீரசிங்கம் வித்தியாசாலையில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு பாடசாலை அதிபர் திரு. எம். சின்னத்தம்பி தலைமை வகித்தார்.

இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை, முன்னாள் காரியாதிகாரி திரு. சிவஞானத்தின் சேவை நலம் பாராட்டியும், புதிய காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளையை வரவேற்றும் இனிய பாடல்களைப் பாடி வழங்கினர்.

புதிய காரியாதிகாரி திரு. ஆர் சிதம்பரப்பிள்ளை மீசாலை வடக்கு மக்கள் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசும் போது, திரு. சிவஞானம் காட்டிய வழியைப் பின்பற்றப்போவதாகவும், அவர் விட்டுச்சென்ற அரும் பெரும் பணிகளைத் தொடர்ந்து செய்யப் போவதாகவும் கூறினர்.

திரு பேரம்பலம் செல்லையா திரு. இராஜ அரியரத்தினம், திரு. கே. மயில்வாகனம், வித்துவான் மு. சபாரத்தினம் ஆகியோரும் பேசினர்கள். கிராமசேவகர் திரு. ஆர். அம்பலவாணர் நன்றி கூறினர்.

# பிரிந்த கம்யூனிஸ்டுகளின் புதிய கட்சி

## இடதுசாரி முன்னணியுடன் இணைய இணக்கம்

கொழும்பு, திங்கள்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியெனக் கூறிக் கொள்ளும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவினரும் சீன ஆதரவாளர்களுமான கோஷ்டியினர் தமது 7-வது தேசிய மகாநாட்டைக் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நேற்று ஆரம்பித்தார்கள்.

கட்சியின் செயற்குழு அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் ஏ. டி. சார்ல்ஸ் ஹாமி, வாட்சன் பெர்னாண்டோ, டி. என். நடுங்கே, ஏ. குணசேகரா, ஹிங்கொட தர்மசேன, என். எல். பெரேரா, டி. ஹென்றி, டாக்டர் எஸ். சிறினிவாசன்

இக்கோஷ்டியினர் தம்மையும் ஒரு சட்டபூர்வமான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாக அங்கீகரிக்கும்படியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயல்பட அனுமதிக்குமாறும் இடதுசாரி முன்னணியைக் கோருவதென மகாநாட்டில் முடிவு செய்யப்படுமெனத் தெரிகிறது.

109 கிளைச் சங்கங்களிலிருந்து 399 பிரதிநிதிகளும் 149 பார்வையாளர்களும் இம்மகாநாட்டுக்கு சமுகமளித்தனர்.

செயற்குழு உறுப்பினர் தெரிவுக்குப் பின்னர் 'சிகப்புக் கொடி' கீதம் சிங்களத்தில் பாடப்பட்டது.

இந்த மகாநாடு கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது மகாநாடு என திரு. பிரேம்லால் குமாரசிறி கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மகாநாடு நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

## தமிழில் நடத்த கோரும் பிரேரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்

புதிய நகரசபை அலுவல்கள் எல்லாம் தமிழில் நடைபெற வேண்டுமென்றும், பற்றுச் சீட்டுக்கள், செக் எல்லாம் தமிழில் வழங்கப்பட வேண்டுமென்றும், பொதுமக்களுடன் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் சாவகச்சேரி நகரசபை 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. கா. தர்மலிங்கம் நகரசபையின் அடுத்த கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டுவரவிருக்கிறார்.

சாவகச்சேரியில் தற்பொழுது ஞாயிற்றுக்கிழமை மட்டும் இருக்கும் சாய்ப்புச் சட்டத்தை திங்கட்கிழமை அரை நேரத்திற்கு நீடிக்கவேண்டும் என்ற பிரேரணையையும் திரு. தர்மலிங்கம் அடுத்த நகரசபை கூட்டத்தில் கொண்டு வருவார்.

## மலேசியா தூதுகோஷ்டி

சிங்கப்பூர், ஜன 20

மலேசியாமீது இந்தோனேஷியா கொண்டுள்ள பகையையும் மலேசியாவின் கொள்கைகளையும் ஆபிரிக்க நாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்காக சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் லீயின் தலைமையில் 12 பேர் கொண்ட தூதுகோஷ்டியொன்று ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்பட்டுள்ளது.


## ஆரம்ப திறப்பு விழா

### பி. எஸ். டிஸ்பென்சரி

75, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையத்திற்கு முன்பாக)

1964-ம் ஆண்டு தை மாதம் 31-ந் திகதி (31-1-64) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு காலம் சென்ற பிரபல வைத்தியரும், இளைப்பாறிய மாகாண சிஸ்ஷகரும், டாக்டர் பி. எஸ். சுப்பிரமணியம் அவர்களின் கீழ் பல ஆண்டுகளாக சேவை செய்தவரும், பல நோயாளர்களின் ஆதரவைப் பெற்றவருமான ரி கே. இராசரெட்ணம் அவர்கள் தற்பொழுது மேற்படி வைத்திய நிலையத்தை ஸ்தாபிக்கிறார். அந்நிலையத்தில் அனுபவம் வாய்ந்த பரிசோதகர் கடமையாற்றுவார்.

என்றும் பி. எஸ். டிஸ்பென்சரியை மறவாதீர்கள். 1765